நாள்: 24.07.2026
OS. 10/2025
பெயர் கருப்பையா
பி.வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u> (2 ம் பிரதிவாதி தரப்பு)

வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். வாதியே எனக்கு வழக்கு விவரங்களை சொன்னார். நான் பணம் கொடுத்த விவரத்தை வாதியிடம் சொல்லியுள்ளேன். வாதியிடம் நேரடியாக பணம் கொடுக்கவில்லை, என் மகன் மூலமாக தான் கொடுத்தேன். எனக்கும், என் மகனுக்கும், அவன் திருமணத்திற்கு பின் பேச்சு வார்த்தை கிடையாது. வீட்டிற்கு மின்கட்டணம், சொத்துவரி, குடிநீர் வரி யார் செலுத்தினார் என்றால் எனக்கு தெரியாது. பணம் கொடுத்தவிவரம் தான் தெரியும். நான் கோபால் மூலமாக தான் பணம் கொடுத்தேன். வாதியிடம் நேரடியாக கொடுக்கவில்லை. என் மகன் மஞ்சள்காமாலை நோய்க்கு மருந்து சாப்பிட்டு கொண்டிருக்கிறார். அவர் மருத்துவ சிகிச்சை எடுத்துவருகிறார் என்றால் தெரியாது. என் மகனுக்கு தெரிந்து தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் தான் பணம் கொடுத்தேன் என்பதை நிருபணம் செய்ய ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் ஆவணம் கிடையாது, நேரடி சாட்சி உள்ளது. என் மருமகள் பிரியங்கா, அவர் அண்ணனும் சேர்ந்து தான் பணத்தை தயார் செய்து வீடுஒத்திக்கு வாதியிடம் கொடுத்தார்கள் என்றும், நான் எந்த பணமும் கோபால் மூலமாக வாதியிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் மருமகள் பிரியங்கா, வரதட்சனை கொடுமைக்காக புகார் கொடுத்து எங்கள் மீது வழகக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது பொய் வழக்கு ஆகும். வரதட்சனை கொடுமைக்காக என் மருமகள் புகார் கொடுத்தநிலையில் அவருக்காக நான் பணம் கொடுத்தாக சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த பணத்திற்காக தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.24 18:09:46 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்